# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 159/நகராட்சி/2019**
**நாள் : 31/01/2020**

**திரு S. ஜெயபால்,**
**தாம்பரம்** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாம்பரம் நகராட்சி,**
**தாம்பரம்** – **எதிர் மனுதாரர்கள்**

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், B-3, கேலக்ஸி கோம்ஸ் முகவரியில் வசிக்கும் திரு S. ஜெயபால் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2019 அன்று பெறப்பட்டு 159/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது நகராட்சி அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், B-3, கேலக்ஸி கோம்ஸ் முகவரியில் வசிக்கும் திரு S. ஜெயபால் என்பவர் தனது வீட்டுக்கருகில் உள்ள நேஷனல் ஹையர் செக்கண்டரி பள்ளி வளாகத்தில் கட்டப்பட்ட சிறுநீர் கழிப்பிடக் கட்டடத்திற்கு கையூட்டு பெற்றுக்கொண்டு சுகாதாரச் சான்று (Sanitary Certificate) வழங்கிய அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட சிறுநீர் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்குறிப்பிடப்பட்ட முறையீடு குறித்து, மனுதாரர் 31.10.2019 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டார். ஆனால், மேற்படி விசாரணைக்கான 17.10.2019 நாளிட்ட அழைப்பாணை போதுமான முகவரியில்லை எனக் குறிப்பிடப்பட்டு திரும்பப் பெறப்பட்டுவிட்டது. எனினும், குற்றச்சாட்டின் தன்மையைக் கருத்தில் கொண்டு நகராட்சி ஆணையாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரிடம் 22.01.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

3. தாம்பரம் நேஷனல் ஹையர் செக்கண்டரி பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டிருந்த சிறுநீர் கழிவறைகள் மேற்கூரைகள் இல்லாமல் இருந்தன என்றும், தற்பொழுது மேற்கூரைகள் அமைக்கப்பட்டுவிட்டன என்றும், கழிவறைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றும் விசாரணையின் போது நகராட்சி அலுவலர்கள் தெரிவித்தனர். மேலும், விசாரணையின் போது தெரிவித்தவாறு 23.01.2020 அன்று முறையீட்டு மனுதாரரின் இல்லத்திற்குச் சென்று அவரது மகளிடம் குறைகளை கேட்டறிந்து துப்புரவு அலுவலர் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் வீட்டருகே பள்ளி வளாகத்தில் இருந்த கழிவறைகளை இடித்து அகற்றிவிட்டு 10 அடி தூரம் தள்ளி புதுக்கழிவறைகளை பள்ளி கோடை விடுமுறையில் அமைத்து விடுவதாக பள்ளி நிர்வாகம் உறுதி அளித்துள்ளது என்றும் துப்புரவு அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. மேற்குறிப்பிட்ட பள்ளியில் 2800–க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பயில்வதாகத் தெரிகின்றது. பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்படுத்தும் சிறுநீர் கழிவறைகளை தூய்மையாகப் பராமரிப்பது மிகவும் அவசியம். மேலும், பள்ளி அருகே வசிக்கும் குடியிருப்புதாரர்களுக்கும் சுகாதாரச் சீர்கேடு நேராவண்ணம் உறுதி செய்வதும் பள்ளி நிர்வாகத்தின் கடமையாகும். எனவே, பள்ளி நிர்வாகம் உறுதி அளித்தபடி தற்போதைய சிறுநீர்க் கழிவறைகளை அகற்றி விட்டு கோடை விடுமுறையில் 10 அடி தூரம் தள்ளி புதிய கழிவறைகளை மேற்கூரையுடன் அமைப்பதை நகராட்சி நிர்வாகம் உறுதி செய்யவேண்டும் என அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள், **31**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5-2-20

செயலாளர்.

5.2.2020

பெறுநர்

1. திரு S. ஜெயபால்,
   **B 3, கேலக்ஸி ஹோம்ஸ்,**
   **தாம்பரம் தாலுகா,**
   **காஞ்சிபுரம் மாவட்டம்**

2. **நகராட்சி ஆணையர்,**
   **தாம்பரம் நகராட்சி,**
   **தாம்பரம்.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**